இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 96– திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 29 – வெள்ளிக்கிழமை 15 நவம்பர் 2024 – வெளியூர் 12 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 96 : Thiruvalluvar Year - 2055 - Appasi 29 - Friday 15 November 2024 - Dak 12+8 Pages ₹ 5.00

## ‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்களின் நிலை! இன்று -

# பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு!

## ஜெயங்கொண்டம் – மகிமைபுரத்தில் – ‘சிப்காட்’ தொழிற்பேட்டைக்கு அடிக்கல் நாட்டுகிறார்!

## கொல்லாபுரத்தில் – பல்லாயிரவர்க்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கிப் பேருரையாற்றுகிறார்!

**சென்னை, நவ.15-**

**பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் திராவிட மாடல் அரசின் திட்டங்களின் நிலை குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று கள ஆய்வு மேற்கொள்கிறார்.**

**ஜெயங்கொண்டம் - மகிமைபுரத்தில் ‘சிப்காட்’ தொழிற்பேட்டைக்கு அடிக்கல் நாட்டுகிறார். கொல்லாபுரத்தில் நடைபெறும் மாபெரும் அரசு விழாவில், பல்லாயிரக்கணக்கான பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கிப் பேருரையாற்றுகிறார்.**

**கழக அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரும் விதம் குறித்து அமைச்சர்கள் - உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஆய்வு மேற்கொள்கிறார். திராவிட மாடல் அரசின் திட்டங்கள், கடை நிலையில் ஏழை, எளிய மக்களை தங்கு தடையின்றிச் சென்றடைய ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து அறிவுரைகள் வழங்குகிறார்.**

அதன் விவரம் வருமாறு:-

இந்தியாவின் மற்ற மாநிலங்கள் பின்பற்றக்கூடிய வகையில் சாதனைத் திட்டங்களை நிறைவேற்றி வரும் நமது திராவிட மாடல் அரசின் ஒவ்வொரு திட்டமும் செயல்பாடுகளும் தமிழ்நாட்டு மக்களுக்கு முழுமையான பயன்களைத் தருவதை உறுதி செய்வதற்காக நமது முதல்வர் அவர்கள், ‘தாம் மாவட்டந்தோறும் நேரில் கள ஆய்வு செய்யவிருப்பதை’ அக்டோபர் 22- அன்று நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அறிவித்தார்கள்.

### முதல்வர் அறிவிப்பு!

“நவம்பர் 5, 6 தேதிகளில் கோவைக்குச் சென்று கள ஆய்வினைத் தொடங்கவிருக்கிறேன். மற்ற மாவட்டங்களிலும் தொடர விருக்கிறேன். கள ஆய்வுப் பணிகளை அந்தந்த மாவட்டங்களில் நிறைவு செய்தபிறகு, கழகப் பணிகளையும் ஆய்வு செய்வேன். கண்மணிகளாம் உடன்பிறப்புகளையும் நேரில் கண்டு நெஞ்சம் மகிழ்வேன்”

- என்று உணர்ச்சிமேலிட அந்த அறிவிப்பினை வெளியிட்டு மகிழ்ந்தார்கள் முதல்வர் அவர்கள்.

### கோவையில் ‘சிக்ஸர்’ அடித்த முதல்வர்!

அந்த அறிவிப்பிற்கொப்ப முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கோவை மாவட்டத்தில் இரண்டு நாள்கள் பயணம் மேற்கொண்டு கள ஆய்வில் ஈடுபட்டார்.

இரண்டாம் நாளின்போது, ரூ.300 கோடியில் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் ஆய்வகத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கோவை மாவட்ட வளர்ச்சிக்காக 6 முக்கியத் திட்டங்களை அறிவித்தார்கள்.

“இந்தத் திட்டங்களை வெளியிட்டு கோவையில் சிக்ஸர் அடித்தார் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்” என ‘தி நியூ இந்தியன்’ எக்ஸ்பிரஸ் ‘ஆங்கில நாளேடு மனப்பூர்வமாக வர்ணித்திருந்தது. “கோவையில் முதல்வர் ‘சிக்ஸர்’ அடித்தார்” எனும் அந்த வர்ணனை எட்டுத் திசையும் எதிரொலித்தது எனின் அது மிகையல்ல!

கோவை சுற்றுப்பயணம் குறித்து ‘முரசொலி’யில் தீட்டிய ‘உங்களில் ஒருவன்’ மடலில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,

“கோவையில் பொதுமக்களின் மகிழ்ச்சியையும் உடன்பிறப்புகளாம் உங்களின் உற்சாகத்தையும் கண்டேன். நெஞ்சம் நிறைந்தேன்!”

மக்களின் பேரன்பில் கோவை மாவட்டக் கள ஆய்வு மகிழ்வாக அமைந்தது, அறிவிக்கப்பட்ட திட்டங்களை உரிய காலத்தில் நிறைவேற்றுவோம் என்ற உறுதியை வழங்கி, நவம்பர் 9,10 தேதிகளில் விருதுநகர் மாவட்டங்களில் ஆய்வுப் பணியினை மேற்கொள்கிறேன்”

என்ற அறிவிப்பினையும் வெளியிட்டார்கள்.

### விருதுநகர் மாவட்டத்தில் முதல்வர் ஆய்வு!

மேற்காணும் தேதிகளில் விருது நகர் மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொண்ட முதல்வர் அவர்கள், அப்பயணம் குறித்து ‘முரசொலி’ – ‘உங்களில் ஒருவன்’ மடலில்,

“விருதுநகர் மாவட்ட ஆய்வுப் பயணத்திலும் அந்த மாவட்டத்தின் இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புதிய சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ளவர்கள் அந்தந்த

தொடர்ச்சி 3ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் முகாம் அலுவலகத்தில், முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது. இக்கூட்டத்தில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக்குழுவின் உறுப்பினர்கள் பேராசிரியர் எஸ்தர் டஃப்லோ, பேராசிரியர் ரகுராம் ராஜன், டாக்டர் அரவிந்த் சுப்ரமணியன், பேராசிரியர் ழான் த்ரேஸ், டாக்டர் எஸ். நாராயண் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கர்நாடக அரசை கவிழ்க்க காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களுக்கு ரூ.50 கோடி வரை பா.ஜ.க. பேரம்!

பெங்களூரு. நவ. 15 –

கர்நாடகாவில் காங்கிரஸ் அரசை கவிழ்க்க பா.ஜ.க. தொடர்ந்து சதி செய்து வருவதாக முதலமைச்சர் சித்தராமையா தெரிவித்துள்ளார்.

தனது தலைமையிலான மாநில அரசை கவிழ்க்க காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களுக்கு தலா 50 கோடி ரூபாய் வழங்க பா.ஜ.க. முன்வந்ததாகவும், ஆனால் எந்தவொரு காங்கிரஸ் எம்.எல்.ஏ.வும் பா.ஜ.க.வின் சதி வலையில் சிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

அதனால்தான், தனக்கு எதிராக ஒன்றிய பா.ஜ.க. அரசு வழக்குகளை பதிவு செய்வதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். ஒவ்வொரு எம்.எல்.ஏ.வுக்கும் 50 கோடி ரூபாய் வழங்கும் அளவுக்கு பா.ஜ.க.வுக்கு எங்கிருந்து பணம் கிடைத்தது? என்றும் முதலமைச்சர் சித்தராமையா கேள்வி எழுப்பியுள்ளார்.

## நாட்டில் விலைவாசி உயர்வுக்கு

# மோடி அரசின் கொள்கைகளே காரணம்!

### காங்கிரஸ் கடும் விமர்சனம்!

*புதுடெல்லி, நவ. 15 -*

*நாட்டில் விலைவாசி உயர்வால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதற்கு மோடி அரசின் தோல்வியடைந்த கொள்கைகளே காரணம் என்று காங்கிரஸ் கட்சி விமர்சித்துள்ளது.*

*நாடு முழுவதும் உணவுப் பொருட்கள் விலை முன்எப்போதும் இல்லாத விதமாக கடுமையாக உயர்ந்துள்ளது. இதுகுறித்து கருத்து தெரிவித்த காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ், விலைவாசியை கட்டுப்படுத்துவதுதான் முதன்மைப்பணி என்று கூறும் மோடி அரசுக்கு, உணவுப் பொருட்கள் விலை விண்ணைத் தொடும் அளவுக்கு உயர்ந்திருப்பது தெரியாதா? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.*

*காய்கறிகள் விலை 42 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்ட அவர், தக்காளி விலை 161 சதவிகிதமும், உருளைக்கிழங்கு 64 சதவிகிதமும், வெங்காயம் 51 சதவிகிதமும் விலை உயர்ந்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார். இதனால், சாமானிய மக்கள் காய்கறிகளை வாங்க முடியாத அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டிள்ளார்.*

*மோடி அரசு தனது கொள்கைகளில் அடைந்த தோல்வியின் விளைவாகதான், விலைவாசி உயர்வால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.*

## தூத்துக்குடியில் 7,893 நபர்களுக்கு ரூ.206.46 கோடியில்

# நலத்திட்ட உதவிகள்: துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

### வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் அதிகாரிகளுடன் விவாதித்தார்!

**தூத்துக்குடி, நவ. 15 -**

**தூத்துக்குடியில் 7 ஆயிரத்து 893 நபர்களுக்கு 206 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். தொடர்ந்து வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.**

தூத்துக்குடி மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் துறை ரீதியான ஆய்வு கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டார். மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மக்களிடம் முறையாக சென்று சேர்கிறதா?, என்னென்ன பணிகள் நிறைவடைந்துள்ளன? என்னென்ன பணிகள் இன்னும் முடிவடையாமல் உள்ளது என்பதை குறித்து அதிகாரிகளிடம் துணை முதலமைச்சர் கேட்டறிந்தார்.

தமிழ்நாடு அரசின் திட்டங்களை சரியான முறையில் மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கும், அரசு அறிவிக்கும் பணிகளை விரைவாக செய்து முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தினார். ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர்கள் கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், சிறப்பு திட்ட செயலாளாக்கத் துறைசெயலாளர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக மகளிர் சுய உதவி குழுக்களின் கண்காட்சியை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார். அதேபோல் 22 துறைகளின் சார்பில் 206 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7ஆயிரத்து 893 நபர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இதன் அடையாளமாக 20 நபர்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2024) தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில், 7,893 பயனாளிகளுக்கு, ரூ.206.47 கோடி மதிப்பில் பல்வேறு அரசு துறைகளின் சார்பாக நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஜி.வி.மார்க்கண்டேயன், ஊர்வசி செ.அமிர்தராஜ், மேயர் பெ.ஜெகன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை துணைச் செயலாளர் மு.பிரதாப், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி அ.பிரம்மசக்தி, துணை மேயர் திருமதி செ.ஜெனிட்டா, தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் லி.மதுபாலன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி இரா.ஐஸ்வர்யா, மாவட்ட வன அலுவலர் ரேவதி ரமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.